**தொழில் அமைச்சு**

**தொழில்சார் பாதுகாப்பு மற்றும்**

**சுகாதாரம் தொடர்பான தேசிய நிறுவகம்**

NIOSH

# பதவி வெற்றிடங்கள்

தொழில் அமைச்சுடன் இணைக்கப்பட்டுள்ளதும் 2009 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, வாழ்க்கைத் தொழில்சார் தற்காப்பு மற்றும் சுகாதாரத்திற்கான தேசிய நிறுவகச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டுள்ளதுமான தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான தேசிய நிறுவகத்தில் வெற்றிடமாக உள்ள பணிப்பாளர் தலைமையதிபதி பதவிக்காக தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

## 01. பணிப்பாளர் தலைமையதிபதி

**1.1 நியமனத்தின் தன்மை**

i. சேவை வகுதி : சிரேஷ்ட முகாமைத்துவம்

ii. சம்பளக் குறியீடு : HM-2-1-2025

iii. சம்பள அளவுத்திட்டம் : ரூ 161,140 – 12 X 4,850 – 219,340

**1.2 ஆட்சேர்ப்புக்கான தகைமைகள் :**

**1.2.1 கல்வி**

**வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான கல்வித் தகைமைகள்**

(1) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவம், பொறியியல், தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம், பணிச்சூழலியல், பௌதிக விஞ்ஞானம், உயிரியல் விஞ்ஞானம், முகாமைத்துவம், வணிகமாணி அல்லது பதவிக்குரிய ஏதேனும் துறைசார் விடயப்பரப்பில் பட்டம் ஒன்றைப் பெற்றிருத்தல்.

மற்றும்

மேற்குறிப்பிட்ட துறைகளுக்குரிய பட்டம் அல்லது பதவிக்குரிய ஏதேனும் துறைசார் விடயப்பரப்பில் அங்கீகரிக்கப்பட்ட பட்டய தொழில்சார் நிறுவனம் ஒன்றின் அங்கத்துவத்தைப் பெற்றிருத்தல்.

மற்றும்

பட்டத் தகைமைகளைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் அரச சேவையில், அரச கூட்டுத்தாபனம் ஒன்றில், நியதிச்சட்ட சபையொன்றில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் துறை நிறுவனம் ஒன்றில் முகாமைத்துவ மட்டத்தில் குறைந்தபட்சம் 17 வருட கால அனுபவம் (இதில் 05 வருடங்கள் வாழ்க்கைத்தொழில்சார் தற்காப்பு மற்றும் சுகாதார செயற்பாட்டில் அனுபவம் பெற்றிருக்க வேண்டும் என்பதுடன், 05 வருடங்கள் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் அமைந்திருத்தல் வேண்டும்).

(2) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து மருத்துவம், பொறியியல், தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம், பணிச்சூழலியல், பௌதிக விஞ்ஞானம், உயிரியல் விஞ்ஞானம், முகாமைத்துவம், வணிகமாணி, சூழலியல் அல்லது பதவிக்குரிய ஏதேனும் துறைசார் விடயப்பரப்பில் பட்டம் ஒன்றைப் பெற்றிருத்தல்.

மற்றும்

ii. மேற்குறிப்பிட்ட துறைகளுக்குரியதாக கலாநிதிப் பட்டம் ஒன்றைப் பெற்றிருத்தல்.

மற்றும்

iii. பட்டத்தைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் அரச சேவையில், அரச கூட்டுத்தாபனம் ஒன்றில், நியதிச்சட்ட சபையொன்றில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் துறை நிறுவனம் ஒன்றில் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்திலான பதவியொன்றில் குறைந்தபட்சம் 05 வருடங்கள் சிறந்த சேவை சாதனையைக் கொண்ட அலுவலராக அனுபவம் பெற்றிருத்தல்.

**உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கான கல்வித் தகைமைகள்**

நிறுவனத்தின் சிரேஷ்ட முகாமைத்துவ (HM 1-1) சேவை வகுதியின் பதவியொன்றில் குறைந்தபட்சம் 02 வருடங்கள் தொடர்புடைய விடயப்பரப்பில் திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

அத்துடன்

பல்வகைப்பட்ட பணிகளில் ஈடுபடும் குழுக்களுக்கு தலைமைத்துவத்தை வழங்குவதிலும், மனித மற்றும் ஏனைய வளங்களை வினைத்திறனுடன் முகாமை செய்வதிலும் துல்லியமான தேர்ச்சியினைப் பெற்றிருத்தல்.

1.2.2 வயது 35 வயதுக்குக் குறையாதவராகவும் 55 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை பொருந்தாது.

1.2.3. ஏனையவை ஒவ்வொரு விண்ணப்பதாரியும்,

i. இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

ii. பதவிக்குரிய கடமைகளை சிறப்பாக நிறைவேற்றுவதற்கும் நாட்டின் எந்தவொரு பகுதியிலும் பணியாற்றுவதற்கும் அவசியமான உடல் மற்றும் உள ரீதியான தகுதியுடையவராக இருத்தல் வேண்டும்.

iii. சிறந்த நற்பண்புகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**1.3. ஆட்சேர்ப்பு முறை** : கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் மூலம் தெரிவு செய்யப்படும்.

**சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள்**

இப்பதவி நியமனம் நிரந்தரமானது. ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதி என்பவற்றிற்கு உரித்துடையது.

**ஆட்சேர்ப்பின் போதான சம்பளம்**

வெளிவாரி விண்ணப்பதாரிகளிலிருந்து ஆட்சேர்ப்புச் செய்யப்படும் போது, சம்பந்தப்பட்ட நபர் சம்பள அளவுத்திட்டத்தின் ஆரம்பப் படிநிலையில் அமர்த்தப்படுவர். உள்வாரி விண்ணப்பதாரிகளை ஆட்சேர்ப்புச் செய்யும் போது அமர்த்தப்பட வேண்டிய சம்பளப் படிநிலை, தாபன விதிக்கோவையின் VII ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கமைய தீர்மானிக்கப்படும்.

**விண்ணப்பிக்கும் முறை**

உங்களால் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவம் 2026.03.23 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் தலைவர், ஆளும் பேரவை, தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான தேசிய நிறுவகம், இல. 97, ஜாவத்தை வீதி, கொழும்பு 05 என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

விண்ணப்பப்படிவம் அடங்கிய கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் உரிய பதவியைக் குறிப்பிட வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்குப் பின்னர் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதி**

விண்ணப்பதாரர் மேற்படி தேவையான தகைமைகளை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியாகிய 2026.03.23 ஆம் திகதியன்று அனைத்து வகையிலும் முழுமையாகப் பூர்த்தி செய்திருந்தால் மாத்திரமே பதவிக்கு நியமிக்கப்படுவதற்காக விண்ணப்பிப்பதற்குத் தேவையான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளதாகக் கருதப்படுவர்.

இப்பதவிக்கான ஆட்சேர்ப்புப் பற்றிய இறுதித் தீர்மானம் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான தேசிய நிறுவகத்தின் ஆளும் பேரவையினுடையதாகும்.

**தொலைபேசி இலக்கம்** :- 011- 2585425 / 011 – 2598672

**மின்னஞ்சல்** :- info@niosh.gov.lk

**வலைத்தளம்** :- www.niosh.gov.lk

**முகவரி :-** **தலைவர்,**
**ஆளும் பேரவை**
**தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான தேசிய நிறுவகம்**
**இல. 97, ஜாவத்தை வீதி**
**கொழும்பு - 05**